# කාර්ය සාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report

## 2024

ජාතික අයවැය දෙපාර්තමේන්තුව
මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය

தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**Department of National Budget**
**Ministry of Finance, Planning and Economic Development**

**2024 வருடத்திற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**
**தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்**

## செலவினத் தலைப்பு இல240 .

## உள்ளடக்கம்


**1. நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு........................................................4**

1.1 அறிமுகம்........................................................................................................4

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்........................................4

1.3 பிரதானபணிகள்..............................................................................................5

1.3.1 எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வ.செ.தி. தயாரிப்புச் செயன்முறை............5

1.3.2 நடைமுறை வருடத்தில் தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைச் செயற்படுத்தல் 6

1.3.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்......................................................6

1.3.4 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான செயற்பாடுகள்..................6

1.3.5 அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் சட்டபூர்வ நிறுவனங்களின் வரவு செலவுத்திட்டம் தொடர்பான செயல்பாடுகள்......7

1.3.6 ஏனைய செயற்பாடுகள்..............................................................................7

1.4 நிறுவனக் கட்டமைப்பு....................................................................................8

**2 முன்னேற்ற மற்றும் எதிர்கால நோக்கு...........................................................................9**

2.1 செயலாற்றுகை விபரம்..................................................................................10

2.2 அரச செலவின முகாமைத்துவம்....................................................................17

2.2.1 2023 வரவு செலவுத்திட்டத்தினைச் செயற்படுத்தல்..........................................17

2.2.2 குறைநிரப்பு மதிப்பீடுகள்..........................................................................17

2.2.3 **அரசியலமைப்பின்** 150 **ஆவது உறுப்புரையின் (**4) **உப பிரிவின் கீழ் ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்ட ஆணைப்பத்திரங்கள்**......19

2.2.4 குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்..............................................18

2.2.4 நிதி பரிமாற்றம்........................................................................................19

2.2.5 குறைநிரப்பு ஒத்துழைப்புச் சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் ஊடாக மேலதிக ஒதுக்கீடுகளுக்கான ஏற்பாடுகள்..........................................19

2.2.6 அரசாங்க செலவினம்................................................................................20

2.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்.................................................................225

**3 வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை (தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்)..........................................................................................................24**

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று.............................................................24

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று ........ 25
3.3 காசுப் பாய்ச்சல் கூற்று ........ 29
3.4 நிதியியற் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ........ 29
3.4.1 அறிக்கையிடல் அடிப்படை ........ 29
3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை – ஏற்புடையதல்ல ........ 30
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை ........ 30
3.7 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை ........ 30
3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ........ 31
3.9 நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் அபிப்பிராயம்....... 28
**4 செயலாற்றுகைச் சுட்டிகள் ........ 31**
4.1 அரச செலவினம் தொடர்பாக 2023 இல் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள் ........ 31
**5 நிலையான அபிவிருத்தி இலக்குகளின் (SDG) அடைவுச் செயலாற்றுகை......... 32**
**6 மனித வள விபரம் ........ 33**
6.1 பதவியணி முகாமைத்துவம் ........ 33
6.2 மனிதவளங்கள் பற்றாக்குறை மற்றும் செயலாற்றுகை ........ 33
6.3 மனித வள அபிவிருத்தி ........ 33
**7 இணக்கப்பாட்டு அறிக்கை ........ 40**

# 1. நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களமானது அரசியலமைப்புச் சட்டம் மற்றும் பாராளுமன்ற சட்ட ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட சட்ட வேலைச் சட்டகத்திற்குள் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் தொழிற்படுகின்றது. நடுத்தரகால பேரண்ட அரசிறை வேலைச் சட்டகத்திற்குள் இணங்கும் வகையில் நடுத்தரகால செலவின வேலைச்சட்டகத்தினை (Medium Term Expenditure Framework - MTEF) துறை ரீதியான அடிப்படையில் வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிக்கும் மைய நிறுவனமாக இத்திணைக்களம் தொழிற்படுகின்றது. இச்செயன்முறையில் நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்கத்தின் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்கள் என்பவற்றுடன் தொடரான தொடர்புகளை பேண முடிகின்றது.

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

**தூரநோக்கு**

"அரச நிதி வளங்களினை வினைத்திறனுடனும் செயற்றிறனுடனும் ஒதுக்கீடுசெய்தல் மற்றும் முகாமை செய்வதனூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தி"

**பணிக்கூற்று**

அரசாங்க பொருட்கள் (Public Goods) மற்றும் தெரிவு செய்யப்பட்ட சேவைகளின் வினைத்திறன் மிக்க வழங்கலுக்காக பொது நிதி வளங்களின் மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு மூலம் அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

**நோக்கங்கள்**

- நிதி வளங்களினை பயன்வலு மற்றும் வினைத்திறன் மிக்கதாக ஒதுக்கீடு செய்தல்.
- அரசிறை ஒழுங்குகளைப் பேணுதல்.
- அரசிறை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல்.
- அரசிறை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல்.
- அரசாங்கக் கொள்கை மற்றும் நிதி வரையறைகளுக்குட்பட்டு அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும்

நியதிச் சட்ட சபைகள் என்பவற்றுக்கான வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

## 1.3 பிரதானபணிகள்

### 1.3.1 எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வ.செ.தி. தயாரிப்புச் செயன்முறை

எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வரவுசெலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- ஏனைய திறைசேரித் திணைக்களங்களுடன் கலந்துரையாடி நடுத்தரகால வரவுசெலவுத்திட்ட வேலைச்சட்டகத்தினை (Medium Term Budgetary Framework - MTBF) பூர்த்திசெய்வதுடன் அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தினையும் பெற்றுக்கொள்ளல்.
- வரவு செலவுத் திட்ட அழைப்புக்கான சுற்றுநிருபத்தினை விநியோகித்தல்.
- செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடி வரைவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- செலவின முகவராண்மைகளுடன் வரவுசெலவுத்திட்ட கலந்துரையாடல்கள் / மதியுரைக் கூட்டங்களை நடாத்துதல்.
- ஏனைய திறைசேரித் திணைக்களங்களுடன் கலந்துரையாடி வருமானம், செலவினம், நிதியிடல், கடன்பெறும் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) வரையறைகளைத் தீர்மானித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான மதிப்பீடுகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சட்டமா அதிபர் மற்றும் சட்ட வரைஞரிடமிருந்து வரைவு ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல். (முதலாவது வாசிப்பு)
- வரைவு வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டினை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொள்ளல்.
- ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான குழு நிலைத் திருத்தங்களை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு - குழுநிலை விவாதத்தில் பங்குபற்றுதல்.
- ஆணைப்பத்திரத்தினைத் தயாரித்தல் மற்றும் கௌரவ நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- செலவின அதிகாரமளிப்புச் சுற்றுநிருபத்தினை விநியோகித்தல்.

### 1.3.2 நடைமுறை வருடத்தில் தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைச் செயற்படுத்தல்

தேசிய வரவு செலவுத்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- வரவுசெலவுத்திட்ட செயற்படுத்துகை தொடர்பாக அங்கீகாரமளித்தல் உள்ளடங்களாக வழிகாட்டல்களையும் சுற்றுநிருபங்களையும் வெளியிடுதல்.
- அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டு வரையறைகள் மற்றும் பராமரிக்கப்படும் அரசிறை ஒழுங்குகளுக்குள் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக நிதி வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கட்டுப்பாடுகளை விதித்தல்.
- தொழிற்பாட்டு வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு செலவின முகவராண்மைகளுடன் இணைந்து செயற்படுதல்.
- நிதி ஒதுக்கீடுகளை வினைத்திறன் மிக்கதாக உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீட்டினை மீள ஏற்பாடு செய்தல் (Reallocation) மற்றும் மாற்றுதல் (Transfer).
- மேலதிக ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் அவசர பொறுப்புக்கள் கருத்திட்டத்தினை (TMV) முகாமைசெய்தல்.

### 1.3.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

வர்த்தக, களஞ்சியசாலைகள், அரசாங்க அலுவலர்கள் முற்பணக் கணக்குகளுக்கான வரையறைகளைத் தீர்மானித்தல் மற்றும் தேவையான போது முற்பணக் கணக்குச் செயற்பாட்டு வரையறைகளைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

### 1.3.4 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான செயற்பாடுகள்

- வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைப் பகுப்பாய்வு செய்து மிகப் பொறுத்தமான நிறுவனங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் மற்றும் தேவையான வழிகாட்டல்களையும் வழங்குதல்.

- தேவையானவாறு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தல் தொடர்பான பின்னூட்டல், மீளாய்வு மற்றும் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.

- விசேட வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தல். (வாகன குத்தகை/ யூலை வேலை நிறுத்தக்காரர்கள் கொடுப்பனவு/மோட்டார் சைக்கிள் வழங்கல்)

### 1.3.5 வருடாந்த தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்கள நோக்கெல்லையின் கீழ் வரும் பொது நிறுவனங்களின் கண்காணிப்பு தொடர்பான செயற்பாடுகள்

- 115 பொது தொழில்முயற்சிகள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடுசெய்தல் மற்றும் அவற்றினது வரவு செலவுத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான உதவியை வழங்குதல்.

- 2003.10.28 ஆந் திகதிய 17 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கைபடி, அந்த பொது நிறுவனங்களின் அதிகாரிகளின் வெளிநாட்டு சுற்றுப்பயணங்களுக்கான செலவினங்களைச் செய்வதற்கு தேவையான அனுமதியினை வழங்குதல்.

- வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீடுகளிலிருந்து மாதாந்த கட்டுநிதியினை விடுவிப்பதற்காக திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்குப் பரிந்துரைகளை வழங்குதல்.

- பதவியணி திருத்தங்களுக்கான பரிந்துரைகளை செய்தல் மற்றும் அந்த பொது நிறுவனங்களின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல்.

- வழக்கமான செயல்திறன் மறுஆய்வுக் கூட்டங்களை நடத்தி, அவர்களின் செயல்திறனை மேம்படுத்த தேவையான கொள்கை வழிகாட்டுதல்களை வழங்குதல்.

### 1.3.6 ஏனைய செயற்பாடுகள்

- பாராளுமன்ற உப குழுவொன்றான அரச நிதிக் குழு (COPF) கூட்டங்களில் திறைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- பாராளுமன்ற துணைக்குழுக்களான அரச கணக்குகளுக்கான குழு (COPA) மற்றும் அரச தொழில்முயற்சிகளுக்கான குழு (COPE) ஆகியவற்றின் கூட்டங்களில் திரைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் ஆதரவை வழங்குதல்.

- பாராளுமன்ற குழுக்கள், அதிமேதகு சனாதிபதி மற்றும் பிரதமரின் கூட்டங்களில் திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தல்.

- தேசிய வரவு செலவுத்திட்டம் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கான அவதானிப்புகளை தயாரித்தல்.

## 1.4 நிறுவனக் கட்டமைப்பு




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ப.நா | - பணிப்பாளர் நாயகம் | | மே.ப.நா | - மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | | க | - கணக்காளர் |
| ப | - பணிப்பாளர் | | பி.ப | - பிரதிப் பணிப்பாளர் | | நி.அ | - நிருவாக அலுவலர் |
| உ.ப | - உதவிப் பணிப்பாளர் | | மு.சே.அ | - முகாமைத்துவ சேவை அலுவலர் | | மொ.அ. | - மொழிபெயர்ப்பு அலுவலர் |
| த.தொ.உ | - தகவல் தொழில்நுட்ப அலுவலர் | | அ.அ | - அபிவிருத்தி அலுவலர் | | அ.உ | - அலுவலக உதவியாளர் |

## 2. முன்னேற்ற மற்றும் எதிர்கால நோக்கு

முந்தைய ஆண்டுகளைப் போலவே, 2025 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத் தயாரிப்புச் செயன்முறை 2024 இல் தொடங்கப்பட்டது. அதன்படி, வரவுசெலவுத்திட்ட அழைப்பு சுற்றறிக்கை 2024 ஆகஸ்ட் 12 அன்று வெளியிடப்பட்டதுடன் மற்றும் முன்னாள் அமைச்சுக்களுடன் வரவுசெலவுத்திட்ட விவாதங்கள் நடத்தப்பட்டன. இருப்பினும், 2024 செப்டம்பர் 24 அன்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, அமைச்சரவையின் கட்டமைப்பில் தற்காலிக அடிப்படையில் மறுசீரமைப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட விவாதங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. புதிய பாராளுமன்றம் 2024 நவம்பர் 21 அன்று கூடிய போதிலும், 2024 ஆம் ஆண்டின் மீதமுள்ள காலகட்டத்தில், சட்டப்பூர்வமாக பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி, 2025 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தினை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற போதுமான நேரம் இருக்கவில்லை.

எனவே, 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 23(1) 90 இன் படி, 2025 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் அரசாங்க செலவினங்களை அங்கீகரிப்பதற்காக வாக்குப் பதிவுக் கணக்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி வாக்குப் பதிவுக் கணக்கு 2024.12.06 அன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

மேற்கண்ட செயன்முறையின் போது, 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத் தயாரிப்புப் பணியும் மேற்கொள்ளப்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட அமைச்சகங்களுடன் கலந்தாலோசித்த பிறகு தயாரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டு சட்டமூலம், 2024.12.24 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

### பிரசை வரவுசெலவுத்திட்டம்

வரவுசெலவுத்திட்ட வெளிப்படைத்தன்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்த தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம், 2023 முதல் ஆண்டுதோறும் பிரசை வரவுசெலவுத் திட்டங்களைத் தயாரித்து வருகிறது. இதன் நோக்கம், அரசாங்க வரவுசெலவுத்திட்ட் பற்றிய தகவல்களை எளிமைப்படுத்தப்பட்ட, தொழில்நுட்பம் குறைவான மற்றும் பொதுமக்களுக்கு உகந்த வடிவத்தில் பொதுமக்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் பரப்புவதாகும். 2024 வரவுசெலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் போது, இந்த ஆவணம் இலங்கையில் முதல் முறையாக பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 2024 ஆகஸ்ட் 8 அன்று நிறைவேற்றப்பட்ட பொது நிதி முகாமைத்துவச் சட்டம், வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் பொதுமக்களுக்கு பொருத்தமான பதிப்பைத் தயாரித்து, அதை வருடாந்த வரவுசெலவுத் திட்டத்டன் சேர்த்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை கட்டாயமாக்கியுள்ளது.







## 2.1 செயலாற்றுகை விபரம்

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| 1. 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினைச் செயற்படுத்தல் மற்றும் செலவின முகாமைத்துவம். | செலவு முகாமைத்துவம் குறித்த வழிமுறைகளை வழங்கும் வ.செ.தி. அங்கீகார சுற்றறிக்கைகளை வெளியிடுதல். | அரசாங்கச் செலவுகளை திறமையாக நிர்வகித்தல். | 2023.12.29 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க தேசிய வ.செ.தி. சுற்றறிக்கை (2024 வ.செ.திட்ட செலவினத்தை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றம் அரச செலவின முகாமைத்துவம்) வெளியிடப்பட்டது. |
| | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5(1) உறுப்புரை மற்றும் நி.பி 66 மற்றும் நி.பி 69 இன் கீழ் நிதி மாற்றலுக்கான அதிகாரமளித்தல்.<br>(வயர்மன்ட் நடபடிமுறை) | அங்கீகரிக்கப் பட்ட மதிப்பீட்டிற் குள் செலவினத்தை முகாமை செய்தல். | நிதி ஏற்பாட்டுக்கான 1,649 கோரிக்கைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இதில் 63 கோரிக்கைகள் நிகழ்ச்சித்திட்ட மாற்றலாகவும் 1,586 கோரிக்கைகள் கருத்திட்டங்களுக்கு இடையிலான மாற்றல் களுக்கானதாகும். மாற்றலுக்கான கோரிக்கைகள் 16 இற்கு நி.பி. 69 இன் கீழ் அதிகாரம ளிக்கப்பட்டது. |
| | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 (1) ஆவது பிரிவின் கீழ் நிதி ஏற்பாட்டினை மீண்டும் ஒதுக்கீடு செய்தல். | செலவின நிறுவனங் களின் தொழிற்பாட்டு க் காக அவற்றிற்கான மேலதிக நிதி ஏற்பாட்டினை வழங்குதல் | எதிர்பாராத மற்றும் அவசர செலவினங்கள் மற்றும் செலவின மதிப்பீடுகளில் காணப்படும் ஏதேனும் குறைபாட்டினை நிவர்த்திப்பதற்கு குறித்த வருடத்தில் குறை நிரப்பு ஒதுக்கீட்டுக்கான 1,614 கடிதங்களுக்கு ரூபா 178 பில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | | | (உ+ம் தொற்றுநோய், இயற்கை அனர்த்தம் போன்ற நிலைமைகள்) |
| | இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மேலதிக ஒதுக்கீடுகளை வழங்குவது தொடர்பான மேலதிக மதிப்பீடுகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல். | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் விதிகளைப் பின்பற்றுதல். | வழங்கப்பட்ட அனைத்து மேலதிக ஒதுக்கீடு களையும் உள்ளடக்கிய 14 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. |
| 2. 2025 வருடத்திற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினை தயாரித்தல். | வருடாந்த வ.செ.தி. மதிப்பீடுகளைத் தயாரிப்பது குறித்த (வ.செ.தி. அழைப்பு) வழிகாட்டுதல்களை விநியோகித்தல். | அனைத்து செலவு நிறுவனங்களின் வழிகாட்டுதல்க ளைப் பின்பற்றி ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல். | 2025 வருடத்திற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களைக் கொண்ட 2024.08.12 ஆந் திகதிய 04/2024 ஆம் இலக்க சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது. |
| | பொதுத் திறைசேரியின் உரிய திணைக்களங்கள் மற்றும் செலவிடும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து வரைவு வருடாந்த வ.செ.திட்டத்தைத் தயாரித்தல். | அரசாங்க பொருளாதார அபிவிருத்தி இலக்குகளின் வருடாந்த இலக்குகளை சட்ட கட்டமைப்பு மற்றும் IMF அளவுருக்களுக்குள் அடைவதை உறுதி செய்தல். | சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலும், 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் விதிகளின்படியும் பொது நிதிக் கட்டமைப்பு முடிவுக்கு வந்தது. |
| | தொடர்புடைய அமைச்சுக்களுடன் வ.செ.தி. கலந்துரையாடல் களை நடத்துதல். | முன்னுரிமை களை கவனத்திற் கொண்டு உரிய நிதி முகாமைத் துவம் மற்றும் நிதி ஒழுங்கு களுடன் தொடர்புடைய நிதி இலக்கினை | 02.09.2024 இலிருந்து 12.09.2024 வரை மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | | அடைந்து கொள்ள முடியுமான வ.செ. திட்டத்தினைத் தயாரித்தல். | |
| | 2025 ஆம் ஆண்டிற்கான வாக்குப் பதிவுக் கணக்கை சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல். | வாக்குப் பதிவுக் கணக்கு வரைவை பாராளு மன்றத்தில் சமர்ப்பித்தல். | வாக்குப் பதிவுக் கணக்கைத் தயாரிப்பதற்கு 25.11.2024 அன்று அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டது.<br><br>புதிதாக நியமிக்கப்பட்ட அரசாங்கத்தின் அமைச்சரவைக் கட்டமைப்பின்படி தயாரிக்கப்பட்ட வாக்கெடுப்பு கணக்கிற்கு 02.12.2024 அன்று அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டது.<br><br>வாக்குப் பதிவுக் கணக்கிற்கான முன்மொழிவு 05.12.2024 அன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, 06.12.2024 அன்று நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. |
| | கௌரவ நிதி அமைச்சரினால் ஆணைப்பத்திரம் வழங்குதல். | செலவினத் திற்கு அதிகாரமளித் தல். | 2024.12.1 ஆந் திகதி கௌரவ நிதி அமைச்சரினால் ஆணைப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது. |
| | 2025 வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்பட்டது.<br><br>வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல் மீண்டும் நடத்தப்பட்டது.<br><br>2025 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் | 2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கான ஒப்புதலைப் பெறுதல். | வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை மீண்டும் அழைப்பதற்காக 03.12.2024 அன்று வரவு செலவுத்திட்ட அழைப்பு சுற்றறிக்கை எண் 04/2024 வெளியிடப்பட்டது.<br><br>02.12.2024 முதல் 10.12.2024 வரைவு வரவு செலவுத்திட்ட விவாதங்களை நடத்தியது. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. | | ஒதுக்கீட்டு சட்டமூலத்திற்கு 23.12.2024 அன்று அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டது.<br><br>ஒதுக்கீட்டு சட்டமூலம் 27.12.2024 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.<br><br>மீதமுள்ள பணிகள் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. |
| 3. முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் | 2023 ஆம் ஆண்டில் வரம்புகள் திருத்தப்பட்ட முன்பணக் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஒப்புதலைப் பெறுதல்.<br><br>2024 ஆம் ஆண்டிற்கான முற்பணக் கணக்கு நடவடிக்கைகளைக் கையாளுதல். | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின்படி முற்பணக் கணக்குச் செயற்பாடு களின் திருத்தப்பட்ட வரம்புகளை அமுல் படுத்துதல்.<br><br>அங்கீகரிக்கப் பட்ட வரையறை களுக்குள் முற்பணக் கணக்கு நடவடிக்கைக ளைப் பராமரித்தல்.<br><br>களஞ்சியங்கள் மற்றும் பிற முற்பணக் கணக்குகளை எந்த இழப்பும் இல்லாமல் பராமரித்தல்.<br><br>வணிக முற்பணக் கணக்குகளை | 2023 ஆம் ஆண்டிற்கான 26 முற்பண “பி” கணக்குகள் மற்றும் 5 வணிக முற்பணக் கணக்குகளின் வரையறைகளை திருத்துவது தொடர்பாக 2024 ஆம் ஆண்டில் 06 தீர்மானங்களின் கீழ் 31 ஆணைகள் மூலம் பாராளுமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.<br><br>2023 இன் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அட்டவணை III.<br><br>மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், ரூபா 16,114 மில்லியன் கடன்கள் / முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், ரூபா 1,463 மில்லியன் வட்டி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது<br><br>முற்பணக் கணக்குகள் மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் இழப்பின்றி பராமரிக்கப்பட்டன. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | முற்பணக் கணக்குகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளை தேவைகளின் அடிப்படையில் மாற்றுதல்.<br><br>2025 ஆம் ஆண்டிற்கான முன்பணக் கணக்கு வரையறைகளைத் தீர்மானித்தல். | இலாபகரமான முறையில் பராமரித்தல். அடுத்த ஆண்டு 31 ஆம் திகதிக்கு முன்னர் வரையறை களை திருத்துவதற்கு பாராளுமன்ற அனுமதியைப் பெறுதல்.<br><br>முற்பணக் கணக்குகளை பராமரித்தல். | தொடர்புடைய 05 வர்த்தக முற்பணக் கணக்குகளிலிருந்து ஏறக்குறைய ரூபா 850 மில்லியன் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.<br><br>அரச அலுவலர்ளின் கணக்குகளுக்கான 11 முற்பணங்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைக்கான 09 வர்த்தக முற்பணக் கணக்குகளின் வரையறைகள் மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் திருத்தப்பட்டுள்ளன.<br><br>2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் அட்டவணை III |
| 4. பாராளுமன்ற செயற்குழுக்களுக்கு ஒத்தழைப்பு வழங்குதல் | பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழு (COPA), அரச தொழில் முயற்சிகள் மீதான குழு (COPE), அரச நிதிக் குழு (COPF) கூட்டங்களில் பிரதிநிதித்துவப் படுத்தல். | பாராளுமன்ற செயற்குழுக்க ளுக்கு அழைப்பு விடுக்கும் போது திணைக்களத் தைபிரதிநிதித் துவப் படுத்தி தேவையான ஒத்தழைப்பு வழங்குதல். | செயற்குழு கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் ஒவ்வொரு கூட்டத்திற்கும் அலுவலொருவர் / அலுவலர்கள் பங்குபற்றி உள்ளனர். |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| 5. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் உள்ளக முகாமைத்துவம் | பின்வரும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்;<br><br>(அ) திணைக்கள செயலாற்றுகை அறிக்கை<br><br>(ஆ) நிதிக் கூற்றுக்கள்<br><br>(இ) நிதி அமைச்சின் ஆண்டறிக்கையின் செலவின மீளாய்வு அத்தியாயம். | உரிய திகதிக்கு முன்னர் அறிக்கைகளை சமர்ப்பித்தல் | பின்வரும் அறிக்கைகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படும்<br><br>(அ) செயலாற்றுகை அறிக்கை<br><br>(ஆ) நிதிக் கூற்றுக்கள் 2023<br><br>(இ) செலவின மீளாய்வு 2023 |
| | திறன் விருத்தி | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி மூலம் மனித வளத்தை மேம்படுத்துதல் | தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு உள்ளூர் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, 27 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளனர். |
| | திணைக்களத்தின் முற்பணக் கணக்குகளின் கட்டுப்பாடு | முற்பணக்கணக்குகளின் வரையறைக்கு இணங்க தே.வ.செ. திட்டத் திணைக்களத்தின் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் கடன் முற்பணம் வழங்குதல். | அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளை கடைபிடித்து, இடர் கடன்கள், சைக்கிள் கடன்கள், விசேட முற்பணங்கள் மற்றும் பண்டிகை முற்பணங்கள் என்பவற்றுக்கு ரூபா 5,751,049.45 வரை வழங்கப்பட்டுள்ளது. |
| | கணக்காய்வு வினவல்களுக்கு பதிலளித்தல். | கணக்காய்வு வினவல்கள குறைத்தல். | கணக்காய்வாளர் நாயக திணைக்களம் அனுப்பிய அனைத்து கணக்காய்வு கேள்விகளுக்கும் (கணக்காய்வு |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | | | வினாக்கள் ஆறு (06) பதிலளிக்கப்பட்டது. |
| 6. வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளர்களுக்கு (சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆ.அ.வ) வசதி வழங்கல். | தேவையான போது அபிவிருத்தி பங்காளர்களுடன் கலந்துரையாடலில் பங்கேற்றல். | அபிவிருத்தி பங்காளர்களுடன் உள்ளக தொடர்புகளை பேணுதல். | தேவைக்கேற்ப பௌதீக ரீதியாகவோ அல்லது மெய்நிகராகவோ அபிவிருத்தி பங்காளர்களுடன் கலந்துரையாடலில் பங்கேற்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>மேலும், தற்போதைய நுண்-பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பான புதிய சட்டங்களை உருவாக்கும் செயற்பாட்டில், இத்திணைக்களத்தின் அவதானிப்புகள் / பரிந்துரைகள் வழங்கப்பட்டன. |

**ஊழியர் நலன்புரி நடவடிக்கைகள்**

தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 01/2024 இன் படி அரசாங்க நிதியைப் பயன்படுத்தி வெளிச்செல்லும் பயிற்சித் திட்டங்களை நடத்துவது தடைசெய்யப்பட்டதால், திணைக்கள ஊழியர்களின் சேவை ஊக்கத்தையும் நல்லுறவையும் மேம்படுத்துவதற்காக ஊழியர்கள் மற்றும் நலன்புரி சங்கத்தின் நிதி பங்களிப்பின் கீழ் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. சிங்கள மற்றும் இந்து புத்தாண்டிற்காக கொம்பனித்தெருவில் உள்ள பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற புத்தாண்டு கொண்டாட்டமும், பேருவளையில் உள்ள மொரகல்ல கடற்கரையில் பார்வையிடல் மற்றும் பொழுதுபோக்குக்காக ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றுலாவும் அவற்றில் முதன்மையானவை. ஊழியர்கள் இந்த நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

## 2.2 அரச செலவின முகாமைத்துவம்

### 2.2.1 2024 வரவு செலவுத்திட்டத்தினைச் செயற்படுத்தல்

2024 ஆம் ஆண்டிற்கான 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் 2023.12.13 அன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி, அரசாங்கத்தின் ஒட்டுமொத்த மீண்டெழும் செலவினம் ரூபா **5,298,669** மில்லியன் என்பதுடன், மூலதனச் செலவு மற்றும் கடன் திருப்பிச் செலுத்துதல் முறையே ரூபா **1,709,775** மில்லியன் மற்றும் ரூபா **4,268,395** மில்லியனாகவும் உள்ளது.

ஒரு குறிப்பிட்ட நிதியாண்டுக்கான நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த செலவினம், நாடாளுமன்றத்தின் துணை மதிப்பீடுகளின் ஒப்புதலின் மூலமாகவோ அல்லது நிதி அமைச்சரால் குறைநிரப்பு சிறப்பு சட்ட உத்தரவுகளை வழங்குவதன் மூலமாகவோ, திருத்தப்பட்ட சட்டமூலத்தினை சமர்ப்பிப்பதன் மூலமாகவோ அல்லது ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி நடவடிக்கை எடுப்பதன் மூலமாகவோ திருத்தப்படலாம்.

அதன்படி, 2024 நிதியாண்டில் 14 குறைநிரப்பு மதிப்பீடுகள், நிதி அமைச்சரால் வழங்கப்பட்ட 04 குறைநிரப்பு சிறப்பு சட்ட உத்தரவுகள் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதுடன் மேலதிகமாக வயர்மென்ட் நடைமுறை மற்றும் வருடத்தில் ஏற்பாடுகள் இடமாற்றங்களுக்கான 1,383 விண்ணப்பங்களின் ஒப்புதலுடன் குறித்த நிதியாண்டில் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கலவை பின்வருமாறு திருத்தப்பட்டது.

- மீண்டெழும் செலவினம் - ரூபா 5,206,092 மில்லியன்
- மூலதனச் செலவினம் - ரூபா 2,227,301 மில்லியன்
- கடன் மீள்கொடுப்பனவு - ரூபா 1,412,245 மில்லியன்

அதன்படி, 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ரூபா 11,276,838 மில்லியனாக இருந்த மொத்தச் செலவு, ஆண்டின் இறுதியில் ரூபா 7,473,393 மில்லியனாகத் திருத்தப்பட்டது.

பொது வளங்களை அதிகபட்ச வினைத்திறனுடன் பயன்படுத்துமாறு வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகளுக்கு இணங்க, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்கள கேட்போர் கூடத்தை வினைத்திறனுடனும் பயனுள்ளவகையிலும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஏனைய நிறுவனங்கள், திணைக்களங்கள் மற்றும் அமைச்சுச் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் பயிற்சிகளை நடாத்துவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

### 2.2.2 குறைநிரப்பு மதிப்பீடுகள்

2024 ஆம் ஆண்டில், பாராளுமன்றம் 14 குறைநிரப்பு மதிப்பீடுகளை 02 சந்தர்ப்பங்களில் (19.06.2024 மற்றும் 06.12.2024 அன்று) அங்கீகரித்துள்ளது, இதன் மொத்த மதிப்பு ரூபா 241,123 மில்லியன் ஆகும்.

இவ்வாறு, 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் விதிகளின்படி, மொத்த தேசிய உற்பத்தியில் 13% ஐ விட அதிகமாக இல்லாத விகிதத்தில் முதன்மை செலவினத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கான தேவையைக் கருத்தில் கொண்டு, 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 7 இன் படி குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் ஏற்பாடுகளைச் செய்யும்போது ஒரே நேரத்தில் சம அளவு ஒதுக்கீடுகளை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனவே, அது மொத்த செலவு மதிப்பீடுகளில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

### 2.2.3 அரசியலமைப்பின் 150 ஆவது உறுப்புரையின் (4) உப பிரிவின் கீழ் ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்ட ஆணைப்பத்திரங்கள்

பாராளுமன்றம் திடீரென 24.09.2024 அன்று கலைக்கப்பட்டதுடன், 14.11.2024 அன்று நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான திகதி நிர்ணயிக்கப்பட்டது. தேர்தல் முன்கூட்டியே தீர்மானிக்கப்படாததால், அதற்கு பணம் ஒதுக்கப்படவில்லை. எனவே, அரசியலமைப்பின் 150 ஆவது உறுப்புரையின் உப பிரிவு (4) மூலம் சனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி, திரட்டு நிதியிலிருந்து ரூபா 5000 மில்லியன் தொகையை விடுவிப்பது தொடர்பாக சனாதிபதி 26.09.2024 அன்று அங்கீகாரம் வழங்கினார்.

### 2.2.4 குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆவது அட்டவணையில் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கச் செலவினங்களைச் சமாளிக்கும் வகையில், திரட்டு நிதியிலிருந்து பணத்தைப் பெறுவதற்கு அதிகாரம் அளிக்கும் சிறப்புச் சட்ட ஆணைப்பத்திரங்களை வெளியிட நிதி அமைச்சர் அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக மேலதிக நிதி தேவையை பூர்த்தி செய்வதற்காக, 2024 ஆம் ஆண்டில், கௌரவ நிதி அமைச்சர் ரூபா 473 பில்லியன் மதிப்புள்ள 04 குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்களை பிறப்பித்துள்ளார்.

### அட்டவணை 2.2.3 குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்

| இல. | செலவினத் தலைப்பு | நிறுவனம் | நோக்கம் / குறிக்கோள் | தொகை (ரூபா.) |
|---|---|---|---|---|
| 01 | 010 | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு | அதிகரித்த ஊதியத்தை தனிப்பட்ட ஊதியங்களில் சேர்க்க மேலதிக ஒதுக்கீடுகளை வழங்குதல். | 12,060,000 |
| 02 | 253 | ஓய்வூதியத் திணைக்களம் | ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மற்றும் இடைக்கால கொடுப்பனவு | 3,400,000,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆகியவற்றிற்கு மேலதிக ஒதுக்கீடுகளை வழங்குதல். | |
| 03 | 001 | அதிமேதகு சனாதிபதி | முன்னாள் ஜனாதிபதியின் பதவிக்காலம் 22.09.2024 அன்று முடிவடையும் நிலையில், அடுத்த ஆண்டுக்கான ஓய்வூதியம் மற்றும் தற்செயலான செலவுகளைச் சமாளிக்க மேலதிக ஒதுக்கீடுகளை வழங்குதல். | 318,500.00 |
| 04 | 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதன் காரணமாக செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன் மற்றும் வட்டிக்கு மேலதிக ஒதுக்கீடுகளை வழங்குதல். | 469,600,000,000 |

### 2.2.5 நிதி மாற்றல்

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 5, நிதி ஒழுங்குமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வைர்மென்ட் நடைமுறைக்கு உட்பட்டு, நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த செலவின வரையறைகளுக்குள் பயன்படுத்தப்படாத விதிகளை நிறுவனங்களுக்கு மாற்ற அனுமதிக்கிறது. அதன்படி, 2024 ஆம் ஆண்டில் தேசிய வரவு செலவுத் திணைக்களம் ரூபா 209.0 பில்லியன் தொகையான அத்தகைய 1,633 மாற்றங்களுக்கு நிதி பிரமாணக் குறிப்பு 66 மற்றும் 69 அடிப்படையில் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 2.2.6 குறைநிரப்பு ஒத்துழைப்புச் சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் ஊடாக மேலதிக ஒதுக்கீடுகளுக்கான ஏற்பாடுகள்

செலவினத் தலைப்பு இல. 240 இன் கீழ் குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புகள் கருத்திட்டம் 2024 ஆம் ஆண்டில் தேசிய வரவு செலவுத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், இது செலவின முகவர்களால் கணிக்க முடியாத அவசர மற்றும் எதிர்பாராத நிதித் தேவைகளை எளிதாக்குகிறது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் ரூபா 220 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டில் பல்வேறு செலவின அலகுகளுக்காக ரூபா 178 பில்லியன் மேலதிக ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறு வழங்கப்பட்ட மேலதிக ஒதுக்கீடுகள் தொடர்பான அறிக்கைகள், 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப, அவ்வப்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. 2024 ஆம் ஆண்டு தொடர்பான 11 அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, வழங்கப்பட்ட அத்தகைய மேலதிக ஒதுக்கீடுகள் பற்றிய விவரங்கள் நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல் மற்றும் திட்டமிடல் அமைச்சின் ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

### 2.2.7 அரசாங்க செலவினம்

2024 ஆம் ஆண்டில் கடன் திருப்பிச் செலுத்துதல் உட்பட மொத்த அரசாங்க செலவினம் 2024 இல் ரூபா 10,806 பில்லியனாக இருந்ததுடன், அது 2023 இல் இருந்த ரூபா 10,674 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 1.2 சதவீதம் அல்லது பெயரளவில் ரூபா 132 பில்லியன் அதிகமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரூபா 5,370 பில்லியனுக்கு இணையான மொத்த அரசாங்க செலவினத்தில் 49.7% மீண்டுடெழும் செலவினமாகும். இது 2023 இல் இருந்த ரூபா 4,729 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இல் 13.5 சதவீதம் அதிகரித்துள்ளது. 2024 இல் மொத்த மூலதனச் செலவு ரூபா 817.09 பில்லியனாக இருந்ததுடன், 2023 இல் ரூபா 932.74 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இது 12.4 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

எனவே, 2023 இல் 66 சதவீதமாக இருந்த அரசாங்க மூலதனச் செலவினங்களின் பயன்பாட்டு விகிதம் 2024 இல் மேலும் வலுவிழந்து 54சதவீதம் வரை கணிசமாகக் குறைந்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் பொதுப் படுகடனைத் திருப்பிச் செலுத்தும் செலவினம் ரூபா 4,618 பில்லியனாக இருந்ததுடன், 2023 இல் ரூபா 5,012 பில்லியனாக இருந்த பொதுப் படுகடனைத் திருப்பிச் செலுத்தும் செலவினத்துடன் ஒப்பிடும் போது, 7.8 சதவீதம் வீழ்ச்சி காணப்பட்டது.

**அட்டவணை 2.4.3: செலவின வகுதியின்படி அரசாங்க செலவினம்**

| | ரூபா பில். | மீண்டெழும் செலவின சதவீதம் | மொத்த செலவின சதவீதம் |
|---|---|---|---|
| **மொத்த மீண்டெழும் செலவினம்** | **5,370.51** | **100** | **49.70** |
| மத்திய அரசாங்கத்தின் ஆள்சார் வேதானதிகள் | 722.52 | 13.45 | 6.69 |
| பிரயாணச் செலவினம் | 8.72 | 0.16 | 0.08 |
| வழங்கல்கள் | 335.33 | 6.24 | 3.10 |
| பராமரிப்புச் செலவினம் | 13.49 | 0.25 | 0.12 |
| சேவைகள் | 123.01 | 2.29 | 1.14 |
| மாற்றல்கள் (மாகாண சபைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கான மாற்றல்கள்) | 1,477.77 | 27.52 | 13.67 |
| வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் கழிவு | 2,689.50 | 50.08 | 24.89 |
| ஏனைய மீண்டெழும் செலவினம் | 0.16 | 0.00 | 0.00 |
| | **ரூபா பில்.** | **மீண்டெழும் செலவின சதவீதம்** | **மொத்த செலவின சதவீதம்** |
| **மொத்த மூலதனச் செலவினம்** | **817.09** | **100** | **7.56** |
| மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 58.22 | 7.12 | 0.54 |
| மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்துதல் | 340.39 | 41.66 | 3.15 |
| மூலதன சொத்து மாற்றல்கள் | 75.95 | 9.30 | 0.70 |
| நிதி சொத்துக்களை கையகப்படுத்தல் | 109.94 | 13.46 | 1.02 |
| ஆற்றல் விருத்தி | 4.42 | 0.54 | 0.04 |
| **ஏனைய மூலதன செலவினம்** | 228.17 | 27.92 | 2.11 |

| | | |
|---|---|---|
| பொது படுகடன் தீர்த்தல் | 4,618.83 | |
| மொத்தச் செலவினம் | 10,806.43 | 100 |

**2024 ஆம் ஆண்டிற்கான செலவினக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்:**
**சுருக்கம் மற்றும் தாக்கங்கள்**

சவாலான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் பொது செலவினங்களைக் குறைப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 01/2024 கோடிட்டுக் காட்டியது. இந்த நடவடிக்கைகள் அரசாங்க நடவடிக்கைகளின் பல்வேறு துறைகளில் பொறுப்புக்கூறல், விவேகம் மற்றும் திறமையான வள முகாமைத்துவ வலியுறுத்தின.
முக்கிய சிறப்பம்சங்கள் இங்கே: முக்கிய செலவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்.

**1. சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்:**
• முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டு வரையறைக்குள் செலவுகள் கட்டுப்படுத்தப்படும்
•விதிவிலக்கான சூழ்நிலைகளைத் தவிர, மேலதிக ஒதுக்கீடுகள் அல்லது F.R. 66 மாற்றங்கள் அனுமதிக்கப்படவில்லை.
•ஆன்லைன் கூட்டங்கள் மற்றும் முடிந்தவரை அதிகாரப்பூர்வ பணிகளுக்கு கள அதிகாரிகளை நம்பியிருப்பதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

**2. பயன்பாடுகள் மற்றும் அலுவலகப் பொருட்கள்:**
• மின்சாரம், தண்ணீர், எரிபொருள் மற்றும் எழுதுபொருட்களுக்கான செலவுகளைக் குறைத்தல்.
• காகித பயன்பாட்டைக் குறைக்க மின்னணு தகவல்தொடர்புகளை ஊக்குவித்தல்.
• அரசு நிதியுதவியுடன் டைரிகள், நாட்காட்டிகள் மற்றும் வாழ்த்து அட்டைகளை அச்சிடுவதை நிறுத்துதல்.

**3. வாகன முகாமைத்துவம்:**
• மின்சாரம், தண்ணீர், எரிபொருள் மற்றும் எழுதுபொருட்களுக்கான செலவுகளைக் குறைத்தல்.
• காகித பயன்பாட்டைக் குறைக்க மின்னணு தகவல்தொடர்புகளை ஊக்குவித்தல்.
• அரசு நிதியுதவியுடன் டைரிகள், நாட்காட்டிகள் மற்றும் வாழ்த்து அட்டைகளை அச்சிடுவதை நிறுத்துதல்.

**4. பயிற்சி மற்றும் வெளிநாட்டு பயணம்:**
• கட்டாயப் பயிற்சிகளுக்காக உள்நாட்டு அரசு நிறுவனங்களுக்கு அதிகாரிகளை வழிநடத்துதல்.
• உள்நாட்டு வளங்கள் மூலம் அரசு அதிகாரிகள் வெளிநாட்டுப் பயணங்களை கட்டுப்படுத்துதல்.
• கட்டாயப் பயிற்சிகள் தவிர பிற பயிற்சிகள் அல்லது வெளிச்செல்லும் பயிற்சிகளில் பொது நிதியைப் பயன்படுத்துவதை நிறுத்துதல்.
• நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரால் 20.03.2023 ஆந் திகதிய MF/06/23/50/2023 ஆம் இலக்க கடிதத்தின் அடிப்படையில் வெளிநாட்டுப் பயணங்களில் அரசாங்க அதிகாரிகளுக்கு செலுத்த வேண்டிய குறைக்கப்பட்ட கொடுப்பனவு விகிதங்களைப் பராமரித்தல்.

**5. கட்டுமானம் மற்றும் வாடகைகள்:**
•புதிய கட்டிடங்களின் கட்டுமானத்தைத் தொடங்காமல் இருத்தல் மற்றும் பகுதியளவு கட்டப்பட்ட கட்டுமானங்களை திருப்திகரமான அளவில் முடிப்பதற்கு முன்னுரிமை அளித்தல்.
• திறைசேரியின் முன் ஒப்புதல் இல்லாமல் அரசாங்கத் தேவைகளுக்காக கட்டிடங்களை வாடகைக்கு விடாமல் இருத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள கட்டிடங்களின் பயன்பாட்டை மேம்படுத்துதல்.

**6. நலன்புரிச் செலவுகள்**
• இலக்கு வைக்கப்பட்ட பயனாளிகள் பயன்களைப் பெறுவதை உறுதி செய்வதற்காக தற்போதுள்ள நலத்திட்டங்களை மதிப்பாய்வு செய்தல்.
• நிறுவன மட்டங்களில் முடிவுகளை எடுத்து மானியத் திட்டங்கள் அல்லது நலத்திட்டங்களை செயல்படுத்தாமல் இருத்தல்.
• பல்வேறு பொருட்கள், பண்டங்கள், நிதி உதவி மற்றும் உபகரணங்களை விநியோகிக்காமல் இருத்தல்.

**7. கருத்திட்டச் செயல்படுத்துகை:**
• நிலுவையிலுள்ள சிட்டைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை வளர்க்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தல்.
• அத்தகைய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு குறிப்பிட்ட அங்கீகாரம் இல்லாமல் நிலம் அல்லது பிற சொத்துக்களை கையகப்படுத்தக் கூடாது.

**8. அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் வாரியங்கள்:**
• நிறுவனத்தின் சட்டரீதியான நோக்கங்களிலிருந்து விலகும் செயல்பாடுகளுக்கான செலவினங்களைக் கட்டுப்படுத்துதல்.
• ஒதுக்கீட்டு வரம்புகளுக்குள் செலவினங்களை நிர்வகித்தல் மற்றும் பயன்படுத்தப்படாத பணத்தை திறைசேரி செயல்பாட்டுத் துறைக்கு தொடர்புடைய வாக்கின் மேல் வரிக்காகத் திருப்பி அனுப்புதல்.
• பயன்படுத்தப்படாத பணத்தை திறைசேரிக்குத் திருப்பி அனுப்புதல், குறிப்பாக அங்கீகரிக்கப்படாத அனைத்து ரசீதுகளையும் ஒருங்கிணைந்த நிதியில் வரவு வைப்பது

• காப்பீட்டுத் திட்டங்கள், சலுகைக் கடன் திட்டங்களை செயல்படுத்தாமல் இருத்தல் மற்றும் முறையான ஒப்புதல் இல்லாமல் அரசாங்க நிதியைப் பயன்படுத்தி மருத்துவக் கட்டணங்களைத் திருப்பிச் செலுத்தாமல் இருத்தல்.
• நிறுவனங்களின் சம்பளத்தை நிர்ணயிப்பதில் பொதுவான ஊதியக் கொள்கைகளிலிருந்து விலகாமல் இருத்தல்.

**9. பொது வழிகாட்டுதல்**

• ஒதுக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டங்களுக்கு அப்பாற்பட்ட செலவின உறுதிமொழிகளைத் தடைசெய்தல், பிரதான கணக்கீட்டு அதிகாரிகள் எந்தவொரு மீறல்களுக்கும் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும்.
• உரிய அதிகாரிகளால் அங்கீகாரம் வழங்கப்படாவிட்டால் புதிய ஆட்சேர்ப்புகள் மற்றும் சம்பள சரிசெய்தல்களை இடைநிறுத்துதல்.
• நியமிக்கப்பட்ட தேசிய விழாக்களைத் தவிர, நிகழ்வுகள் அல்லது விழாக்களுக்கு அரசாங்க நிதி பயன்படுத்தப்படுவதைத் தடுத்தல்.

**தாக்கங்கள்**

2024 செலவினக் கட்டுப்பாடுகள், குறிப்பாக பொருளாதாரக் கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, நிதி ஒழுக்கத்தைப் பேணுவதற்கான ஒரு கவனம் செலுத்தப்பட்ட முயற்சியைக் குறிக்கின்றன. அத்தியாவசிய சேவைகள் மற்றும் முன்னுரிமை அபிவிருத்தித் திட்டங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்து, பொது நிறுவனங்கள் செலவு சேமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அனைத்து அரசாங்க செயல்பாடுகளிலும் செயல்திறன் மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த சுற்றறிக்கையின் கீழ் வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டன.

## 2.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

முற்பணக் கணக்கு செயற்பாடுகள், தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகள் மூலம் செயற்படுத்தப்படும் ஆதனக் கடன்கள் மற்றும் அரசாங்கத்தால் இயக்கப்படும் வணிக இயல்புகளின் செயற்பாடுகளைத் தவிர, அரச அலுவலர்களுக்கான கடன்கள் மற்றும் முன்பணங்களை உள்ளடக்கியது. அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் மற்றும் கடன்களை வழங்குவதற்காக 2024 வருடத்தின் போது 170 கணக்குகள் மற்றும் வர்த்தக ரீதியான செயற்பாடுகளுக்காக 11 கணக்குகள் உட்பட 181 கணக்குகள் தொடர்பான அதிகபட்ச செலவின வரம்புகள், வரவுகளின் குறைந்தபட்ச வரம்புகள், பற்று இருப்பின் அதிகபட்ச வரம்புகள் மற்றும் பொறுப்புகளின் அதிகபட்ச வரம்புகளை பாராளுமன்றம் விதித்தது.

### 2.3.1பெறுகைகளின் ஆகக்கூடிய வரையறைகள்

181 முற்பணக் கணக்குகளுக்கு விதிக்கப்பட்ட அதிகபட்ச செலவின வரம்பு ரூபா 44.907 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டுக்கான உண்மையான செலவு ரூபா 32.22 பில்லியனாக இருந்தது. மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட அதிகபட்ச செலவினத்திலிருந்து ஒட்டுமொத்தமாக 72% பயன்படுத்தப்பட்டது. அரச அலுவலர்களுக்கு முற்பணம் வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து 87% சதவீதமும், வணிக முற்பணக் கணக்குகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து 61% சதவீதமும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 மற்றும் 01/2023 இன் உத்தரவுகளின்படி பணியாளர் அதிகாரிகளுக்கான கடன்களை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது மற்றும் அச்சிடுதல், விளம்பரம் மற்றும் விற்பனைக்கான அட்வான்ஸ் கணக்கின் கீழ் உள்ள செலவுகள் ஆகியவை அதிகபட்ச செலவின வரம்புகளை உணராததற்கு முக்கிய காரணங்களாகும். கல்வித் திணைக்களத்தின் 21302 செலவினத் தலைப்பின் கீழ் வெளியீடுகளின் வெளியீடு எதிர்பார்த்தபடி நிறைவேற்றப்படவில்லை.

### 2.3.2 பெறுகைகளின் ஆகக்குறைந்த வரையறைகள்

அரசாங்கத்தின் முன்கூட்டிய கணக்குகள் மூலம் எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச வரவுகள் ரூபா 38.907 பில்லியனாகவும், உண்மையான வரவுகள் ரூபா 30.31 பில்லியனாகவும் இருந்தது. அரசாங்க அலுவலர்களின் முன்கூட்டிய கணக்கிலிருந்து எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச பெறுகைகள் நிறைவேற்றப்பட்ட போதிலும், மேலே 2.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கல்வித் திணைக்களத்தின் 21302 செலவினத் தலைப்பின் கீழ் குறைந்தபட்ச பெறுகைகள் இலக்குகள் அடையப்படவில்லை, இதனால் அது நிறைவேற்றப்படவில்லை. குறைந்தபட்ச பெறுகைகளின் வரையறைகள் தொடர்பான ஒட்டுமொத்த இலக்குகளை உணரவும்.

### 2.3.3 அரச அலுவலர்களின் முற்பண "பி" கணக்குகளின் வட்டி வருமானம்

அரச அலுவலர்களுக்கு முற்பணங்கள் மற்றும் கடன்களை வழங்குவதற்காக 2024 ஆம் ஆண்டில் 170 கணக்குகள் பேணப்பட்டுள்ளதுடன், மேற்படி முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் மூலம் 2024 ஆம் ஆண்டில் 1,463 மில்லியன் ரூபாய்கள் திரட்டு நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

### 2.3.4 வணிகம், களஞ்சியங்கள் மற்றும் பிற முற்பணக் கணக்குகளின் நிதி செயலாற்றுகை

ஏனைய 11 முற்பணக் கணக்குகள் 09 செலவினத் தலைப்புகளின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றதுடன், மேற்படி கணக்குகளில் 02 களஞ்சிய முற்பணக் கணக்குகளாகவும் 04 பிற முற்பணக் கணக்குகளாகவும் பராமரிக்கப்படுகின்றன. இந்தக் கணக்குகளிலிருந்து இலாபம் அல்லது நட்டம் எதிர்பார்க்கப்படுவதில்லை. 05 உற்பத்தி மற்றும் வர்த்தக நோக்கங்களுக்கான முற்பணக் கணக்குகள் இலாபகரமான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் 2024 இல் 850 மில்லியன் ரூபாய் திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

### 2.3.5 முற்பண வரையறைகளுக்கான திருத்தம்

அரச அலுவலர்களுக்கு முற்பணங்களை வழங்குவது தொடர்பான 11 கணக்குகளின் வரையறைகளும், வர்த்தக இயல்புடைய செயற்பாடுகள் தொடர்பான 09 வர்த்தக கணக்குகளின் வரையறைகளும் மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் திருத்தப்பட்டுள்ளன.

